மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

02.10.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# இலங்கை மக்களுடன் இந்தியா என்றும் இணைந்திருக்கும்

## மட்டக்களப்பில் இந்திய தூதுவர் கோபால் பாக்லே

இலங்கை மக்களுடன் இந்தியா என்றும் இணைந்திருக்கும் என இந்திய தூதுவர் கோபால் பாக்லே மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்துள்ளார். இந்தியாவின் உதவித்திட்டத்தின் கீழான உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்ற போதே இலங்கைக்கான இந்திய தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்திய தூதுவர் கோபால் பாக்லே பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் கோரிக்கைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 200 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இந்திய மக்களினால் தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இதன்கீழ் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், இந்திய தூதரகத்தின் 02



# வைத்தியசாலைகளில் சத்திரகிசிச்சைகள் ஆய்வுகூட செயற்பாடுகளிற்கு பாதிப்பு

மருந்து பற்றாக்குறை தொடர்ந்தும் நாடளாவியரீதியில் ஆய்வுகூடங்கள் வைத்தியசாலைகளின் நடவடிக்கைகளை பாதித்துவருகின்றது. லேடிரிஜ்வே வைத்தியசாலை உட்பட நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் தொடர்ந்தும் அன்டிபயோட்டிக்ஸ் மற்றும் வலி நிவாரணிகள் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன என தெரிவித்துள்ள அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரட்ணசிங்கம் பஞ்சு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு காணப்படுவதாக தெரிவித்துள்ளார். சில மருத்துவமனைகள் சாதாரண சத்திரகிசிச்சைகள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்துகின்றன என தெரிவித்துள்ள அவர் சில மருத்துவமனைகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான சத்திரகிசிச்சைகளை மேற்கொள்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார். 02

### நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிய

## மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் விசாரணை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. மாறிவரும் அரசியல் காரணங்களால் பொருளாதாரத்தில் கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கம் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது. மேலும் பொருளாதாரச் சரிவை ஏற்படுத்திய கொள்கை முடிவுகளை எடுப்பதில் அதிகாரிகள் நடந்துகொண்ட விதம் 02

## 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பு

இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் 93,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவற்றில் சுமார் 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார். 02

## அமைச்சு பதவியை பெறுவதற்கு பதிலாக சாய்ந்தமருது நகர சபையை கேளுங்கள்

### தே.கா தலைவர் அதாவுல்லாவுக்கு அறிவுரை

நூருல் /ஹுதா உமர்

அண்மையில் நியமிக்கப்பட உள்ள அமைச்சரவையில் அமைச்சு பதவியை பெறுவதற்கு பதிலாக நம்பி வாக்களித்த சாய்ந்தமருது மக்களின் கோரிக்கையாக அமைந்துள்ள நகர சபையை அரசிடம் கேட்டு பெற்றுக்கொடுங்கள். பெற்றுக்கொடுக்க 02

# ஜனாதிபதி ஆணைக்குழுக்களிற்காக ரூ.504 மில்லியன் செலவு

கடந்த எட்டு வருடங்களில் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் நியமித்த, ஜனாதிபதி ஆணைக் குழுக்களுக்கு 504 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் மூலம், இந்த தகவல் தெரியவந்துள்ளது. கோட்டாபய தலைமையிலான அரசின் ஆட்சிக்காலத்திலேல் அதிகபட்சமாக 120 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளமை இதில் தெரியவந்துள்ளது. இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்து ஆண்டுகளில், ஐந்துஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்காக 254 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடும் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் முடிவுகள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. எனவே, இந்தச் செலவினங்களிற்கு பலன் கிடைத்துள்ளதா என்பதை அளவிட முடியவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. 02

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் குறைக்கப்படாது

அரச ஊழியர்களின் சம்பளம் அடுத்த மாதம் முதல் குறைக்கப்படும் என சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். அரசாங்கம் அவ்வாறானதொரு தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களைத் தூண்டி விடுவதற்காக சிலர் மேற்கொள்ளும் இத்தகைய பிரச்சாரங்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும், அரச ஊழியர்களின் தொழிலை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதப்படுவதாகவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## பட்டப்படிப்புக்களை பயிலுவதற்கு இந்தியாவில் 100 புலமைப்புரிசில்

### உறுதியளித்த இந்திய உயர் ஸ்தானிகர்



(அஷ்ரப் ஏ சமத்)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவுக்கு இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பல்கே இன்று ஒக்டோபர் 1ஆம் திகதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அங்கு அவர் உறையாற்றும்போது கிழக்கு பல்கலைக்கழகமாணவர்கள்மேலும்பட்டப்படிப்புக்களை பயிலுவதற்கு இந்தியாவில் 100 புலமைப்புரிசில் திட்டமொன்றை பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார். அத்துடன் காத்தான்குடி மெத்தப் பள்ளிவாசல் மற்றும் பதுரியா ஜும்ஆ மஜ்ஜித் விஜயம் செய்தார். அத்துடன் மட்டக்களப்பில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்கு இந்திய அரசின் உலர் உணவுப் பொதிகளை உயர் ஸ்தானிகர் வழங்கி வைத்தார்.

## அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகத்திலிருந்து 12 மில்லியன் டொலர் மருந்துகள்

சுமார் 12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்க அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம், அமெரிக்காவின் பிரபல மனிதாபிமான உதவி அமைப்புகளுடன் இணைந்து, இலங்கைக்கு மருந்துகளை வழங்க 02

## மூத்த பிரஜைகளுக்கான நிலையான வைப்புத்தொகைக்கான விசேட வட்டித் திட்டம் நிறுத்தம்

நாட்டின் மூத்த பிரஜைகளுக்கான நிலையான வைப்புத்தொகைக்கான விசேட வட்டித் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது குறித்து அறிவிப்பை வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி குறித்த செயன்முறை கடந்த சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில், மூத்த பிரஜைகளுக்கான நிலையான வைப்புத்தொகைக்கான சிறப்பு வட்டித் திட்டத்தை நிறுத்துவதற்கு கடந்த மாதம் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக 02




இந்தியாவின் உதவித்திட்டத்தின் கீழான உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்ற போது...



### இலங்கை மக்களுடன் இந்தியா

அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடியான காலத்தின்போது இந்திய உற்ற நண்பராகயிருந்து தொடர்ந்து உதவிவருவதையிட்டு இலங்கை மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாகயிருப்பார்கள் என இங்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

### வைத்தியசாலைகளில் சத்திரகிசிச்சைகள்

அவர்கள் முற்றாக சத்திரகிசிச்சைகளை ஒத்திவைக்காத அதேவேளை அவர்கள் அவசர சத்திரகிசிச்சைகளை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.
இலங்கை மருந்துகள் விநியோக பிரிவில் போதியளவு பொருட்கள் இன்மையே பற்றாக்குறைக்கு காரணம் என குறிப்பிட்டுள்ள வாசன் ரட்ணசிங்கம் பற்றாக்குறைகள் உள்ளபோதிலும் கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலை தொடர்ந்தும் இயங்குகின்றது என தெரிவித்துள்ளார். நாங்கள் சிலவகை மருந்துகளை கேட்டால் அவை மருந்துகள் விநியோக பிரிவில் இல்லாத நிலை காணப்படுகின்றது ஆனால் நன்கொடைகள் காரணமாக அவை கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியாசாலையில் சில நாட்கள்வரை கிடைக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

### மூத்த பிரஜைகளுக்கான நிலையான வைப்புத்தொகைக்கான விசேட வட்டித் திட்டம்

இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. இதன்போது சிறப்பு உயர் வட்டி விகித திட்டத்தின் கீழ், மூத்த குடிமக்களின் நிலையான வைப்பு கணக்குகளுக்கு 15மூ வட்டி விகிதம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிய

குறித்தும் கவனம் செலுத்த ஆணைக்குழு எதிர்பார்க்கிறது. பொருளாதார நெருக்கடியின் ஊடாக மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதன் காரணமாகவே இந்த விசாரணை நடத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாட்டில் வேரூன்றி இருக்கும் ஊழல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் மனித உரிமைகள் பேரவை அமர்வில் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் கடந்த கால மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில்

அதற்கமைய, மருத்துவ பீடத்திற்கு 2,035 மாணவர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதுடன் பொறியியல் பீடத்திற்கு 2,238 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். 2021ஆம் ஆண்டின் உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய 171,497 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

### அமைச்சு பதவியை பெறுவதற்கு பதிலாக

முடியவில்லை எனில் தனது எம்பி பதவியை இராஜினாமா செய்து குதிரை வேட்பாளர்களில் விருப்பு வாக்கில் இரண்டாம் இடத்தில் உள்ள சாய்ந்தமருதை சேர்ந்த ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்.சலீமுக்கு வழங்குங்கள் என தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் :- நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் எந்தவொரு அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுக்க முடியாத நிலை உள்ளது. இந்த நிலையில் அமைச்சு பதவியை பெற்று அதாவுல்லாவால் எந்தவொரு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியாது என்பது யாவரும் அறிந்த விடயம். அமைச்சு பதவியை பெற்று நீங்களும் உங்களை சார்ந்தோரும் சொகுசாக வாழலாமே ஒழிய மக்களுக்கு எதுவுமே செய்ய முடியாது. இவ்வாறு எவ்வித பிரயோசனமும் அற்ற அமைச்சு பதவியை பெறுவதை விடுத்து , நீங்கள் ஏற்கெனவே வாக்குறுதி அளித்த சாய்ந்தமருது நகர சபையை கேட்டுப் பெறுங்கள். சாய்ந்தமருது நகர சபை கோஷத்தை வைத்து பெருமளவு வாக்குகளை பெற்று எம்பியானீர்கள். போலி வர்த்தமானி மூலம் சாய்ந்தமருது மக்களை ஏமாற்றினீர்கள். தேர்தல் ஒன்று வரலாம் என்ற கதையாடல்கள் மேலோங்கி வரும் நிலையில் , மீண்டும் சாய்ந்தமருது நகர சபை கோஷத்தை உயிர்ப்பிக்க முயல்கிறீர்கள். இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடல்ல. அமைச்சு பதவி வேண்டாம் நான் வாக்குறுதி வழங்கி, என்னை பாராளுமன்றம் அனுப்பிய சாய்ந்தமருது மக்களுக்கான நகர சபையை தாருங்கள். இல்லையேல் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்கிறேன் என்று பகிரங்கமாக கூறுங்கள். இப்படி உங்களால் கூற முடியுமா..? ஆகக் குறைந்தது தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து, கடந்த தேர்தலில் சாய்ந்தமருது மக்கள் சார்பில் குதிரையில் களமிறங்கிய சாய்ந்தமருது சலீமுக்கு வழங்கி சாய்ந்தமருது மக்களுக்கு நன்றி செலுத்துங்கள் என்று யஹியாகான் மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகத்திலிருந்து 12 மில்லியன் டொலர் மருந்துகள்

தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. இதுவரை, 03 தடவைகளில், சுகாதார அமைச்சுக்கு மருந்துப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் இறுதிக் கட்டமாக இன்னுமொரு தொகை மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இன்று (02) இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்த அமைப்புகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற விரும்புவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். இதேவேளை, **Heart to Heart International, Hope Worldwide, Americares** ஆகிய நிறுவனங்களுக்கு தனது நன்றிகளையும் அவர் தெரிவித்தார்.

**Heart to Heart International** நிறுவனம் கடந்த ஜ்லை மாதம் 9.131 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகளை கையளித்திருந்தது. **Americares** நிறுவனம் கடந்த செப்டம்பர் மாதம் இலங்கைக்கு வழங்கிய உதவியின் மதிப்பு 773,000 அமெரிக்க டொலர்களிலும் அதிகமாகும். மேலும் **Hope Worldwide** நிறுவனம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு அனுப்பவுள்ள உதவிப் பொருட்களின் பெறுமதி 1.74 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்




ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு எனவும்,எனவே இலவசக் கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் சாசனம் இன்னும் கூடிய ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். தற்போது,போசாக்கு குறைபாடு காரணமாக சிறுவர்கள் பல கடுமையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி,பிரதமர் பதவிகள் போன்ற வரப்பிரசாதங்கள் எதுவுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் சார் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர்,ஐக்கிய மக்கள் சக்தி என்பது சம்பிரதாய ரீதியான எதிர்க்கட்சியொன்று அல்ல எனவும் அவர் தெரிவித்தார். தேசத்தின் குழந்தைகளை டிஜிடல் உலகினில் வளமுள்ளவர்களாக உருவாக்குவதே எங்களின் ஒரே இலக்காகும். அந்த இலக்கை மனதில் கொண்டு “பிரபஞ்சம்” வேலைத்திட்டத்தை நமது எண்ணக்கருவாகக் கொண்டு செயல்படுத்துகிறோம். அந்த எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பேரூந்துகள் வழங்கப்படுவதோடு,இன்று கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ”பிரபஞ்சம்” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 35 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபா (ரூ.5,000,000) பெறுமதியான பஸ் வண்டி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு நேற்று(01) அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.




# அதிபருக்கு விசாரணை முடியும் வரை இடமாற்றம்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

விசாரணை முடிவடையும் வரை அதிபர் நுவரெலியா வலய கல்வி காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த பாடசாலையின் பணியை தொடர்வதற்காக அங்கு கடமையாற்றும் பெண் ஆசிரியை ஒருவர் கடமையாற்றும் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகே தெரிவித்தார். பத்தனை பிரதேசத்தில் பாடசாலையொன்றில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரை அதிபர் தாக்கியதாக ஊடகங்கள் மூலம் தெரியவந்ததையடுத்து, உடனடியாக இது குறித்து ஆராய்ந்து விசாரணை நடத்துமாறு மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, சம்பவம் இடம்பெற்ற மறுநாளே இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான முழுமையான அறிக்கை எதிர்வரும் நாட்களில் வழங்கபடவுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள்





**தலவாக்கலை பி.கேதீஸ்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையில் பாடசாலையின் அதிபர் சு.கிருஷ்ணசாமி தலைமையில் சிறுவர் விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு வெற்றி கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிதிகளாக பாடசாலையின் அதிபர் சு.கிருஷ்ணசாமி, பிரதி அதிபர் நிர்மலாதேவி, தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தலைவர் சந்தன பிரதீப் குணத்திலக, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் செயலாளர் பாலமுரளி, பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பத்மநாதன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# நிந்தவூரில் போதைப் பொருள் பாவனை 50 வீதம் வரை குறைவடைந்துள்ளது



**(நூருல் /ஹுதா உமர்)**

நிந்தவூர் பிரதேசத்தில் போதைப் பொருள் மற்றும் புகையிலை பாவனையில் 50 வீதம் வரை தற்போதைக்கு குறைவடைந்துள்ளதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.றயீஸ் தெரிவித்தார். நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் நிதியில் இருந்து நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு எரிபொருள் செலவீனங்களுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றுகையில் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் புகையிலை பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் புகையிலை பாவனை தடைசெய்யும் அதிகாரம் சரியாக பயன்படுத்தப்பட்டதால் நிந்தவூர் பிரதேசத்தில் இருந்து புகையிலை பாவனைக்காக செலவிடும் பல கோடி ரூபா பணத்தை மீதப்படுத்த முடிந்தது. எமது சமூகத்தை போதையில் வைத்திருக்க வேண்டிய தேவை சிலருக்கு இருக்கலாம். ஆனால் அதனை அனுமதிக்க முடியாது. எமது பிரதேசத்தில் பயன்படுத்தப்படாதுள்ள குழாய் கிணறுகள் டெங்கு பெருக்கத்திற்கு காரணமாக அமைகிறது. கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நோய் தாக்கத்தில் நிந்தவூர் 7வது இடத்தில் உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆரோக்கியமான உணவு பழக்க வழக்க முறைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து இதுவரை நிந்தவூர் பிரதேசத்தில் சுமார் ஆயிரம் நபர்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த காலகட்டத்தில் முன்பள்ளி பருவ மாணவர்களின் போசாக்கு விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்றார். நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் உப தலைவர் மௌலவி எம் ஐ எம் நியாஸ் (தப்லிகி) தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் செயலாளர் எம் எஸ் எம் நிப்றாஸ், பொருளாளர் ஆதம்பாவா, நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் உறுப்பினரர்களான நிந்தவூர் ஜம்மியத்துல் உலமாவின் செயலாளர் மௌலவி ஏ எம் ஆஷிக் அலி, நிந்தவூர் ஜ/ம்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பொருளாளர் ஏ.எல்.அன்வர்டீன், உப தலைவர் ஏ.அஸ்வத்கான், நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர் ஏ.அஸ்பர், கதீப் முஅத்தீன் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.ஏ.சி.எம்.அப்துல் ரகுமான் உட்பட பலரும் கலந்து கொண்டனர் இதன்போது நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எரிபொருள் தேவைக்கான நிதி உதவி அனர்த்த முகாமைத்துவ அணியின் உப தலைவரால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து |Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ| 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# சாதனைகளை நிலைநாட்டும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்








அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாணமட்ட குழுவிளையாட்டுக்களில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஒரு முதலிடத்தையும், இரண்டு இரண்டாம் இடங்களையும், மூன்று மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன. குறித்த வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய 20வயதுப்பரிவு பெண் மாணவர்கள் உதைபந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தினையும், 20வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடி போட்டியில் இரண்டாம் இடத்தினைப் கன்னன்குடா மகா வித்தியாலயமும் 18வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்து போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயமும், 16வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்து போட்டியில் மூன்றாம் இடத்தினை கடுக்காமுனை வாணி வித்தியாலயமும் 20வயதுப்பிரிவு ஆண்களுக்கான எல்லே போட்டியில் மூன்றாம் இடத்தினைப் மகிழவட்டவான் மகா வித்தியாலயமும் 20வயதுப்பிரிவு பெண்களுக்கான எல்லே போட்டியில் மூன்றாம் இடத்தினைப் காயான்குடா கண்ணகி வித்தியாலயமும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணமட்ட தமிழ்மொழித்தின எழுத்தாக்கப்போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் இரண்டு முதலிடங்களையும், ஒரு இரண்டாம் இடத்தினையும் ஒரு மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளது. குறித்த வலயத்திற்குட்பட்ட அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவி ச.சசிகலா குறுநாடக ஆக்கம் போட்டியில் முதலாம் இடத்தினையும், சிறுகதை ஆக்கம் போட்டியில் முதலைக்குடா மகா வித்தியாலய மாணவி சி.தேனுஸ்கா முதலிடத்தினையும் இலக்கணப் போட்டியில் முதலைக் குடா மகா வித்தியாலய மாணவி ந.யதுசாழினி இரண்டாம் இடத்தினையும் மகிழவட்டவான் மகா வித்தியாலய மாணவி ச.தனுசிக்கா கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் போட்டியில் 3ம் இடத்தினையும், பெற்றுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.





மண்முனை தென்மேற்கு பிரதேச மனிதநேய காப்பகத்தின் ஏற்பாட்டில் நேற்று(01) பட்டிப்பளையில் சிறுவர் தின நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணகௌரி தினேஸ், இலங்கைச்செஞ்சிலுவைச்சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் வசந்தராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கையெழுத்துதிரட்டும் நடவடிக்கை மொனராகலையிலும் முன்னெடுப்பு





(ரக்ஸனா)

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய இன்றைய தினமும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை மொனராகலை பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

# மலைநாட்டுப் பகுதிகளில் மாவுக்கு பெரும் தட்டுப்பாடு மக்கள் கவலை

(வாஸ் கூஞ்ஞ)

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப் போவதாக தெரிவித்து வர்த்தகர்கள் கோதுமை மாவை பதுக்கி வைத்து தட்டுப்பாட்டுக்கு வழி சமைத்துள்ளதாக மத்திய மலைநாட்டுப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மத்திய மலைநாட்டுப் பகுதி மக்கள் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், அண்மை காலமாக கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டபோதும் கோதுமை மா சில தினங்களாக பெறக்கூடிய நிலை காணப்பட்டதாகவும், ஆனால் மீண்டும் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட இருப்பதாக கேள்விப் பட்டதும் தற்பொழுது இப்பகுதிகளில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவ ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் பகுதி வர்த்தகர்கள் பதுக்கியுள்ளமையாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இப் பகுதி மக்கள் பெரும்பாலும் கோதுமை மாவின் உணவையே உண்டு வருவதாகவும் இவ் மா தட்டுப்பாட்டால் இப் பகுதி மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ் வாழ் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்

# மரணத் தருவாயிலும் தன்னைப்பற்றி கவலைப்படாது மன்னார் மக்களின் நலனிலேயே அக்கறைக்காட்டியவர்தான் அமரர் பி.எம்.செபமாலை



( வாஸ் கூஞ்ஞ)

மரணத் தருவாயிலும் கிடந்தபோதும் தன்னைப்பற்றி கவலைப்படாது மன்னார் மக்களின் நலனிலேயே அக்கறைக்காட்டி வந்தவர்தான் அமரர் பி.எம். செபமாலை ஐயா என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அமரரின் இறுதி சடங்கின்போது தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார். தமிழர் விடுதலைக் கூட்டனி கட்சியின் ஆரமபகால உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான பி.எம். செபமாலை அவர்களின் இறுதிச் சடங்கு வெள்ளிக் கிழமை (30.09.2022) இடம்பெற்றபோது அஞ்சலிக் கூட்டத்தில் சாள்ஸ் நிர்மலநாதன் தொடர்ந்து தெரிவிக்கையில்

அமரர் பி.எம்.செபமாலை ஐயா அவர்கள் தான் கொண்ட கொள்கையில் என்றும் மாறாது தடம்பதித்த உன்னதமான ஒரு தலைவர்.

அவர் தனது இனத்துக்காக அரும்பாடு பட்டவர். எப்பொழுது தமிழனத்துக்காக தன்னை அர்ப்பணித்தாரோ அவர் மரணிக்கும் வரை தனது இனத்துக்காகவே வாழ்ந்து காட்டியுள்ளார். அது மட்டுமல்ல இவர் கலை பண்பாட்டுக்களிலும் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் இவர் பெயர் சொல்லக்கூடியளவுக்கு தன்னை அடையாளப்படுத்தக்கூடிய தன்மையில் அவர் வாழ்ந்துள்ளார்.

இவர் பல விடயங்களில் சிறந்து காணப்பட்டபோதும் மக்கள் மத்தியில் மிகவும் பண்புள்ள மனிதனாக வாழ்ந்திருக்கின்றார். நான் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பின் இவரை அடிக்கடி இவர் இல்லத்துக்கு வந்து சந்திப்பதும் அவரிடம் ஆலோசனை பெற்றுச் சென்றவன். மறைந்த இந்த தலைவர் என்னிடம் கூறுவது மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது கட்டுக்கரைக்குளம் இவற்றை தொடர்ச்சியாக கண் காணித்துக் கொள்ளுங்கள் என தெரிவிப்பார். இவர் மரணிக்கும் தருவாயிலும் தன்னைப்பற்றி சிந்தனைக் கொள்ளாது மன்னார் மக்கள் நலனிலேயே அக்கறையாக இருந்தார் என்பதே இது எடுத்துக்காட்டு. தற்பொழுது இவரைப் போன்று எங்களில் எத்தனைபேர் இவ்வாறு இருக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியே.

இன்று மன்னார் மாவட்டத்தில் பி.எம்.செபமாலை என சொல்பவர்களைவிட சேர்மன் ஐயா என்று சொல்பவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.இந்த நேரத்தில் நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக அமரருக்கு எங்கள் அக வணக்கத்தையும் இவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் நவிழ்ந்து நிற்கின்றேன் என்றார்.

# அல் வபா பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின வைபவம்




ஹஸ்பர்

திருகோணமலை,முள்ளிப்பொத்தானையில்இயங்கிவரும் சமூக அமைப்பான அல் வபா பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் வன்னிஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி உதவியுடன் நேற்று(01)சிறுவர் தின நிகழ்வானது ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது."சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம்" எனும் தொனிப்பொருளின் கீழ் இடம் பெற்ற சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி கலந்து சிறப்பித்தார். பீப்பில் சேர்வீஸ் கவுன்சில் நிறுவனத்தின் தலைவர் பாரிஸ் மற்றும் அந்நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெஸ்ஸி ,தம்பலகாமம் நுளயபெநடஉையட தேவாலய அருட் தந்தை வேலு ராஜா , அல் வபா பவுண்டேஷன் அமைப்பின் செயலாளர் எஸ்.எம். சியாம் மற்றும் தலைவர் ஏ.எஸ். முவாசீர் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக முன்பிள்ளைபருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ். அன்வர்தீன் ,மற்றும் கல்மெட்டியாவ பிரதேச கிராம உத்தியோகத்தர் சில்வா உட்பட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

இதில் முன்பள்ளி சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் பரிசளிப்பு வைபவமும் நடை பெற்றன. நான்கு முன்பள்ளி பாடசாலைகளை சேர்ந்த சிறார்கள் பலர் கலந்து கொண்ட திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் உரையாற்றிய தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்கள் சிறுவர்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து அவர்களுடைய ஆரோக்கியத்திலும் அக்கரை செலுத்துவதுடன் சத்தாண உணவுகளை வழங்கி அவர்களுடைய பாதுகாப்பிலும் கல்வியிலும் அதிக அக்கரை செலுத்த வேண்டும் என்றார்.

# தலவாக்கலையில் பெருந்தோட்ட சேவையாளர்கள் ஆர்ப்பாட்டம்




தலவாக்கலை பி.கேதீஸ்

பெருந்தோட்ட கம்பனிகள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளத்தை அதிகரிக்குமாறு வலியுறுத்தி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் தலவாக்கலை நகரில் நேற்று (01) பெருந்தோட்ட உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டமானது தலவாக்கலை லோகி பெரியமல்லியப்பு வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக தலவாக்கலை நகருக்கு வந்து தலவாக்கலை நகரின் பிரதான சுற்றுவட்டத்திற்கு அருகில் அணிதிரண்ட தோட்ட உத்தியோகத்தர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்பாட்டத்தில் கொழும்பு,பதுளை,நுவரெலியா,தலவாக்கலை, ஹட்டன், மஸ்கெலியா,இரத்தினபுரி,மத்துகம,நாவலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கு அதிகமான பெருந்தோட்ட சேவையாளர்கள் கலந்துக்கொண்டனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தினால் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் சுமார் ஒரு மணித்தியாலம் வரை வாகன போக்குவரத்து தடைப்பட்டது. வாகன நெரிசலை சீர் செய்வதற்கு பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுப்பட்டிருந்தனர். பெருந்தோட்ட உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தம் நேற்று முன் தினம் (30) முடிவடைந்துள்ளதுடன், தற்போதைய வாழ்க்கைச் செலவை விட 70 வீத சம்பள அதிகரிப்பை வழங்குமாறு தோட்டக் கம்பனிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், 25 வீத சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அவர்கள் செயற்பட்டு வருவதாக இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் சார்பில் போட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் தெரிவித்தனர்.இது தொடர்பில், பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் இரண்டு தடவைகள் பெருந்தோட்ட கம்பனிகளின் சம்மேளனத்துடன் கலந்துரையாடிய போதிலும், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவாறு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு சம்மதிக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த போராட்டத்தில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர் உட்பட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

# அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் பாற்குடபவனி

வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருச்சடங்கு திருவிழாவின் பாற்குடபவனி நேற்று (01) பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது. அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்களின் தலைமையிலான பூஜை வழிபாடுகளோடு ஆரம்பமான பாற்குடபவனியில் வீரம்மாகாளியம்மன் ஆலய தலைவர் பி.பிராசந்தன் மற்றும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலய தலைவர் வி.சுகிர்தகுமார் உள்ளிட்ட ஆலய அறங்காவலர்கள் உற்சவகாலகுரு உற்சாடனபானு சிவத்திரு இ.யோகானந்தம் உதவிக்குருமார்களான சக்தி பிரியன் சிவத்திரு சோ.கஜேந்திரன் இளஞ்சுடர் சிவத்திரு யோ.மோகன்ராஜ் காளியின் மைந்தன் சிவத்திரு ஜெ.ஜெயரூபன் சக்திதாசன் சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு பாற்குடபவனியை ஆரம்பித்து வைத்தனர்.



வம்மியடிப்பிள்ளையாருக்கான விசேட பூஜைகள் இடம்பெற்றதுடன் பாற்குடவபனி பக்தர்களின் ஆரோகாரா எனும் வேண்டுதலுக்கு மத்தியில் ஆரம்பமானது. கணபதி ஹோமம் மற்றும் திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமான திருச்சடங்கானது இன்று அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து இடம்பெற்ற பாற்குடபவனியுடனும் 02ஆம் திகதி இடம்பெறும் அம்மனின் உள்வீதி உலா வருதலுடனும் 03ஆம் திகதி காவடி ஆட்டங்களுடன் இடம்பெறும் வெளிவீதி மற்றும் கிராம சுற்றுலாவுடனும் 04ஆம் திகதி இடம்பெறும் சக்தி மகா யாகம் நோர்ப்பு நெல் நேர்தல் ஆகிய கிரியைகளுடனும் 05ஆம் திகதி அதிகாலை இடம்பெறும் பக்தி ததும்பும் தீமிதிப்பு 12ஆம் திகதி இடம்பெறும் எட்டாம் சடங்குடனும் நிறைவுறும். ஆலய தலைவர் பி.பிராசந்தன் தலைமையில் நேற்று இடம்பெற்ற திருக்கதவு திறக்கும் நிகழ்வினையும் வருடாந்த அலங்காரத் திருச்சடங்கினையும் ஆலய வழிபாட்டு பிரதான கிரியைகள் யாவற்றையும் ஆலய பிரதமகுரு க.சிவராசா, உற்சவகாலகுரு சிவத்திரு இ.யோகானந்தம் உள்ளிட்ட பிரதம குருமார்களாலும் சிவத்திரு சோ.கஜேந்திரன் சிவத்திரு யோ.மோகன்ராஜ் சிவத்திரு ஜெ.ஜெயரூபன் சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்ட உதவி பூசகர்களாலும் நடாத்தி வைக்கப்படவுள்ளதுடன் வாத்ம சாந்தி கிராம சாந்தி சக்தி பூஜை ஆகியவற்றை சிவஸ்ரீ சீ.கு.கௌரிசங்கர் குருக்கள் அவர்களால் நடாத்தி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் நிகழ்வும் விழிப்புணர்வுக் கருத்தமர்வும்

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினத்தை முன்னிட்டு 30ஃ09 வெள்ளிக்கிழமை சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் நிகழ்வும்– விழிப்புணர்வுக் கருத்தமர்வும் இடம்பெற்றிருந்தது. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வளவாளராக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரஜீபன் கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்தமர்வை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேச செயலகத்தில் கௌரவிக்கப்பட்ட 97 வயது மூதாட்டி



(எம்.என்.எம்.அப்ராஸ்)

உலக சிறுவர்,முதியோர் தினத்தை முன்னிட்டு கல்முனை சமூர்த்தி பிரதேச அமைப்பின் எற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி தலைமை பீட சிரேஷ்டமுகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நேற்று (01) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி முன்னிலையில் நற்பிட்டிமுனையை சேர்ந்த கலந்தர் உம்மா (97வயது) உட்பட மேலும் இதன் போது கல்முனையை சேர்ந்த நெய்னா முகம்மது (86வயது), மருதமுனையை சேர்ந்த பி.எம்.ஹிசாம் மதார்(73வயது) ஆகிய முதியோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன்கல்முனைபிரதேசசெயலகபிரிவில் சமுர்த்தி உதவி பெறும் மிகவும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 31மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும் கல்முனை சமாதன பாலர் பாடசாலை மாணவர்களின் நடனம் இடம்பெற்றது மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எஸ்.பரீரா,கல்முனை சமூர்தி வங்கி முகாமையாளர் மோசஸ் புவிராஜ், நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக எம். ஏ. எம் .பைசால்,மருதமுனை சமூர்தி வங்கி வலய முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீப், பிரதேச செயலக பிரதம நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.றம்சான், கல்முனை சமூர்தி வங்கி வலய உதவி முகாமையாளர்களான யூ.எல்.தௌபீக்,ஐ.எல். அர்சுத்தின்,பீ.எம்.இஸ்ஹாக்,சிரேஷ்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,என்.எம்.நௌசாத், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.ஹஸ்பியாபீவி,கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.சுசந்த கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவுகளுக்கு பொறுப்பான சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,சமூர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள், முதியோர்கள் மாணவர்கள் ,பெற்றோர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# தேசிய கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் தேசிய வேலைத் திட்டம்




(ரக்ஸனா)

தேசிய கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக திருகோணமலை பட்டினமும் சூழலும் கடற்கரையோரப் பிரதேசங்கள் சுத்தப்படுத்தி தூய்மையாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ரீ. திலீப்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலாளர் டி.எச்.என் ஜயவிக்கிரமவின் பிரசன்னத்துடன் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் கடற்கரையோரத்தை அண்டிய பகுதிகள் துப்புரவாக்கப்பட்டன. சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), இலங்கை பொலிஸ், கடற்படை, திருகோணமலை நகராட்சி மன்றம் இலங்கை கரையோரப் பாதுகாப்பு அமைப்பு இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து முன்னெடுத்துள்ள சிரமதானப் பணியின் துவக்க நிகழ்வில் திருகோணமலை மாவட்ட உதவிச் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் வடகிழக்குக்கான உதவி முகாமையாளர் ரீ. சிறிபதி, திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்கள், "அன்பின் பாதை சமூகம்" தன்னார்வ உதவு ஊக்க அமைப்பின் பணிப்பாளர் றொசில்டா அன்ரோ உட்பட இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு நிகழ்வை ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவித்த திருகோணமலை மாவட்ட செயலாளர் ஜயவிக்கிரம இயற்கையை சேதப்படுத்தாமல் அழிக்காமல் எந்தக் காலமும் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். இந்த தேசிய நிகழ்வில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கம்" என்றார்.

# இந்திய துாதரகத்தால் 200 பேருக்கு நிவாரண உதவி



வடமலை ராஜ்குமார்

திருகோணமலைக்கு உத்தியோக பூர்வ விஜயம் (02 ஞாயிற்றுக்கிழமை) மேற்கொண்டிருந்த இந்திய உயஸ்தானிகர் கோபால் பாக்லே திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று தரிசித்ததுடன் ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடி அதனைத் தொடர்ந்து திருகோணமலை நகராட்சி மன்றத்தின் நகரமண்டபத்திலே இடம் பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு 200 பேருக்கான உலர் உணவுப் பொதியினை வழங்கி வைத்தார்.

இதன் போது திருகோணமலை நகரசபையின் உப தவிசாளர் காளிராஜா கோகுல்ராஜ் மற்றும் மூத்த ஊடகவியலாளர் திருமலை நவம் இந்திய துாதரகத்தின் அரசியல் துறை ஆலோகர் பானு பிரகாஸ் உட்பட நகரசபை மற்றும் பிரதேசசபையின் உறுப்பினர்கள் அரசியல் பிரமுகர்கர்கள் மதகுருமார் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கது.

# சிறந்த ஊடகவியலாளர் விருது பெற்றார் இளம் ஊடகவியலாளர் பாறுக் ஷிஹான்



**KDMC Nesansala Training Centre Kalmunai** யின் 8வது பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதன் நிறைவேற்றுப்பணிப்பாளர் எஸ்.எம்.ஹாஜா தலைமையில் கடந்த 24.09.2022ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில் 85 பட்டதாரி மாணவர்கள் பல்வேறு துறைகளில் பட்டங்களைப் பெற்றதுடன், பிராந்தியத்தில் ஊடகத்துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கி வரும் பாறுக் ஷிஹானுக்கு சிறந்த ஊடகவியலாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கொழும்பு லேடி ரிஜ்ட்வே சிறுவர் வைத்தியசாலையின் **(Colombo Lady Ridgeway Hospital for Children)** முன்னாள் பிரதிப்பணிப்பாளரும் கல்முனை அபிவிருத்தி முகாமைத்துவ சபையின் தலைவருமான வைத்திய கலாநிதி ஏ.எல்.எம் நஸீர் கலந்து சிறப்பித்தார். இளம் ஊடகவியலாளர் பாறுக் ஷிஹான் யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி என்பதுடன், அதே பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் பட்டப்படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளார்.

கடந்த 2004ம் ஆண்டிலிருந்து தமிழ், சிங்கள, ஆங்கில ஒலி, ஒளி மற்றும் பத்திரிகை, இலத்திரனியல் ஊடகங்களிலும் செய்தியாளராகப் பணியாற்றி வருகின்றார். புலனாய்வுத்துறை ஊடகவியலாளராகவும் தனது பணியினை செவ்வனே நிறைவேற்றி அநீதிக்கெதிரான குரலாகவும் தன்னை நிலைநிறுத்தியுள்ள ஷிஹான், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் வழிகோலியுள்ளார். இப்பட்டமளிப்பு விழாவில், பட்டதாரி மாணவர்கள், பெற்றோர்கள், அதிதிகள் எனப்பலரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் உரம் விநியோகத்திற்கான நடவடிக்கை

(வி.ரிசகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் உரிய நேரத்தில் உர விநியோகத்தை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீரசிங்க தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி கலந்துரையாடல் இடம் பெற்றது. எதிர்வரும் பருவத்திற்கு கால விவசாய தேவையான உரங்களை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தேவையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.

உர நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயற்பட அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் உரங்களை உடனுக்குடன் விநியோகிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் பருவ காலத்தில் விவசாய பணிகளை தொடங்குவதில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கு தேவையான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், அம்பாறை பொது வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. காரைதீவு மேற்கு வயல்வீதி தொடர்பாக காரசாரமான விவாதம் இடம் பெற்றது. காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே விவாதம் சூடாகியது.

தவிசாளருக்கும் பிரதேச செயலாளருக்கும் தெரியாமல் ஒரு பிரதேசத்தில் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது. எனவே காரைதீவில் உரிய அதிகாரிகள் ஒன்று கூடி தீர்மானிக்கும் முகமாக ஒரு குழுவை நியமிக்குமாறு பணிக்கப்பட்டது. அத்துடன் சுகாதாரம், கல்வி, கடற்றொழில், போக்குவரத்து, வீதி நிர்மாணம் என பல்வேறு துறைகளில் அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு, அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டது குறிப்பிட்டத்தக்கது.

# நிலைக்கடலை உற்பத்திக்கு விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டிய விவேகானந்த சமுதாய அறக்கட்டளை



(ரக்ஸனா)

தற்போது பொருளாதார வீழ்ச்சியால் அதிகம் எமது விவசாய உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிர் விதைகளிற்கான முதலீடு மற்றும் உரத்திற்கான விலைவாசி என்பன அதிகரித்து காணப்படுவதுடன், உற்பத்திகளுக்கான உரிய சந்தைப்படுத்தலும் கிடைக்காத நிலையில் பலர் இந்த விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதில் பின்வாங்கி வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், பல விவசாயக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே இதனை கருத்தில் கொண்ட விவேகானந்த சமுதாய அறக்கட்டளை தங்களது நன்கொடையாளர்களின் உதவி மூலமாக தற்போது முதற்கட்டமாக 15 குடும்பங்களிற்கு நிலைக்கடலை உற்பத்திக்கான விதை பருப்பு மற்றும் உரம் என்பவற்றை வழங்குவதுடன் அவர்களின் சந்தைப்படுத்தலுக்கான உதவியினையும் செய்வதற்கு முன்வந்துள்ளனர். இதற்கான உதவியினை கனடாவில் வசிக்கும் இ.ஏகாம்பரம் அவர்களின் பிறந்ததின் நிகழ்வில் அவர்களின் உறவுகள் நண்பர்களால் வழங்கப்பட்ட பணத்தின் ஒருபகுதியான ரூபா ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்தினை இந்த செயற்பாட்டிற்காக வழங்கியுள்ளார்.

அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கான நிலக்கடலை விதைகளை வழங்கும் நிகழ்வு கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தில் (கிரான்) பிரதேச செயலாளர் சு.ராஜ்பாபு அவர்களின் முன்னிலையில் அப்பிரதேச விவசாய போதனாசிரியர் க.நிசாந்தன் அவர்களின் ஆலோசனையுடன் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் உறவுகள் இவ்வாறு தங்களது கொண்டாட்டங்களை மட்டுப்படுத்தி பல உதவித்திட்டங்களை தங்களுடாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும், அவ்வாறே இ.ஏகாம்பரம் அவர்களும் அவரின் 75வது பிறந்ததின கொண்டாட்ட நிகழ்வில் உறவுகள், நண்பர்களால் வழங்கப்பட்ட நிதி முழுவதனையும் அவரால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் கல்வி செயற்பாட்டிற்கு வழங்கவிருப்பதுடன் அதில் ஒரு பகுதியினை இவ்வாறு வாழ்வாதார உதவிக்கும் வழங்கியுள்ளார் என விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தெரிவித்தார்.



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழாவில், மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் வகையில் சனிக்கிழமை (1) இடம்பெற்ற தோரணம் கட்டுதல் போட்டி நிகழ்வின் போது. **(படங்கள். வி.ரி .சகாதேவராஜா)**

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி. அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை. மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)

அமைவிடம்: திருகோணமலை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# திருகோணமலையில் வட்டமேசைக் கலந்துரையாடல்



(அ .அச்சுதன்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் செயற்திட்டத்தின் கீழ் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் இளையோர் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் ஆய்வுகளின் வட்டமேசைக் கலந்துரையாடல் நிகழ்வானது 29.09.2022ம் திகதி திருகோணமலை லோட்டஸ்பார்க் ஹோட்டலில் இடம்பெற்றிருந்தது. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தற்கால சூழலில் சமூக மட்டங்களிலே பேசுபொருளாக மாறியுள்ள சமூக, பொருளாதார மற்றும் உளவியல் சார் பிரச்சினைகளை மையப்படுத்திய முக்கிய பிரச்சினைகளை இனங்கண்டு ஆய்வுகளை மேற்கொண்டு சமர்ப்பித்திருந்தனர் .இத்தகைய இளையோரின் முயற்சிகளினை ஊக்குவிக்க நிகழ்வின் அதிதியாக திருகோணமலை பல்கலைக்கழக வளாக முதல்வர் பேராசிரியை சந்திரவதனி தேவதாசன் அவர்கள் மங்களவிளக்கேற்றி இந்நிகழ்வினை அங்குராப்பணம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை விழுது உத்தியோகத்தர் சிவஜோதி கிருஸ்ணபிள்ளை வழங்கியதோடு , தலைமையுரையினை அபிவர்ணா வர்ணகுலசிங்கம் அவர்கள் வழங்கி இளையோரின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளினை அடையாளப்படுத்தும் ஆய்வுகள் முன்மொழியப்பட்டன.

ஆரம்ப நிகழ்வாக விழுது அமைப்பின் ஸ்தாபகர் அமரர் சாந்தி சச்சிதானந்தம் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளினை நினைவு கூறும் வகையில் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலியும் செய்யப்பட்டதோடு சாந்தியின் நினைவுகள் மீட்டல் என்ற கருப்பொருளில் அம்மையார் ஆற்றிய சேவைகள் , ஆளுமைத்திறன் குறித்து விழுதின் முன்னைநாள் அலுவலகர் வடமலை ராஜ்குமார் வழங்கிவைத்தார். இதனைத் தொடர்ந்து சிறப்பு அதிதியாக வருகைதந்திருந்த திருகோணமலை பல்கலைக்கழக வளாக முதல்வர் பேராசிரியை சந்திரவதனி தேவதாசன் அவர்களிளால் ஏற்புரை வழங்கப்பட்டதோடு அதிலே குறிப்பாக சமூகவியல் ஆய்வின் தேவைப்பாடும் , அவசியத்தினையும் அறிந்து இளையோரிடம் இத்தகைய செயற்திட்டம் கையளிக்கப்பட்டமையானது சமூகத்தின் மாற்றத்தினை ஏற்படுததும் தூண்டுகோலக அமைவதோடு இங்குள்ள அரச உத்தியோகத்தர்களும் அதற்கு பக்கபலமாக அமைய வேண்டும் என்பதை எதிர்பார்ப்பதாகவும், இத்தகையதொரு முயற்சிக்கு பல்கலைக்கழக முதல்வர் என்ற ரீதியில் தொடர் ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தார். பிரதான நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்பட்டது. அந்தவகையில் இளையோர் மத்தியிலான விலகல் நடத்தையும் அதன் தாக்கங்களும்: பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவினை மையப்படுத்திய ஆய்வினை திருகோணமலை விழுது எப்.எம் பிர்னாஸ் அவர்களும் , பெண் விவசாயிகளினால் மேற்கொள்ளப்படும் மரக்கறி உற்பத்திகளின் சந்தைப்படுத்தலும் இடைத்தரகர் சார் பிரச்சினைகளும்: மூதூர் பிரதேச செயலக சம்பூர் கிராமத்தினை மையப்படுத்திய ஆய்வினை திருகோணமலை விழுது கீர்த்தனா பத்தினியன் அவர்களும், சட்டரீதியற்ற புலம்பெயர்வினை மேற்கொண்ட இளையொர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் : பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களினை உள்ளடக்கியதான ஆய்வினை திருகோணமலை விழுது தனுஜா மாதவராசா அவர்களும் திருகோணமலை விழுது கீர்த்தனா பத்தினியன் அவர்களும், தற்கால மீனவ சமுதாயத்தின் பிரச்சினைகளும் அதனை எதிர்கொள்ளும் முறைகளும் தொடர்டபான ஆய்வினை திருகோணமலை விழுது எச். ஏம் .ஹசன் அவர்களும், மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளான , கொரோனாவிற்குப் பின்னரான காலப்பகுதியில் சட்டவிரோத மதுஉற்பத்தியின் போக்கும் அதனால் ஏற்படும் சமூக பொருளாதார மற்றும் உளவியல் பிரச்சினைகளும் :ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகப்பிரிவினை உள்ளடக்கிய ஆய்வினை மட்டக்களப்பு விழுது கிழக்கின் அகல் அங்கத்தவர் சிவகுமார் சிவலோஜன் அவர்களும் , விசேட தேவையையுடைய மாணவர்கள் கல்வியைத் தொடர்வதிலுள்ள சவால்கள்:ஏறாவூர்ப்பற்று செங்கலடிப்பிரதேச செயலகப்பிரிவினை உள்ளடக்கிய ஆய்வினை விழுது கிழக்கின் அகல் அங்கத்தவர் அர்ச்சனா அரியரத்தினம் அவர்களும் , பதின்ம வயதுத் திருமணத்திற்கான காரணங்களும் திருமணம் முடித்த இளவயதுப் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார சுகாதாரப்பிரச்சினைகளும் : ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகப்பிரிவினை உள்ளடக்கிய ஆய்வினை மட்டக்களப்பு விழுது கிழக்கின் அகல் அங்கத்தவர் தனுஜா வடிவேல் அவர்களும் , பெற்றொர்களின் விவாகரத்து சிறுவர்களின் நல்வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் : ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகப்பிரிவினை உள்ளடக்கிய ஆய்வினை மட்டக்களப்பு விழுது கிழக்கின் அகல் அங்கத்தவர் அஜித்தா அரியரத்தினம் அவர்களும் , ஆய்வு முறையிலுக்கு உட்பட்டதான ஆய்வு ஒழுக்கவியலைப் பின்பற்றி ஆய்வு முன்மொழிவினை வழங்கியிருந்தனர். இளையோர்களின் இத்தகைய முயற்சியில் இப்பிரச்சினை சார் துறை வல்லுனர்கள் மற்றும் சட்டரீதியிலான பரிந்துரைக்கான அரச உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குபற்றி தமது கருத்துக்களையும் முன்வைக்கப்பட்ட பரிந்துரை குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

குறிப்பாக ஆராயப்பட்ட ஆய்வுத் தலைப்புகளிற்கு திருகோணமலை மாவட்ட சிரேஸ்ட பொலீஸ் உத்தியோகத்தர் சந்தியா , வெளிநாட்டு அமைச்சின் பிராந்திய கௌன்சிலின் பொறுப்பதிகாரி விக்னேஸ்வரன் , திருகோணமலை மாவட்டத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொறுப்பதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் அதிகாரி சுகந்தினி ,மீன்பிடி திணைக்களத்தின் அதிகாரி மற்றும் ஆய்வுகளோடு தொடர்புபட்ட அரச உத்தியோகத்தர்களும் , திருகோணமலை மாவட்டத்தின் செய்தி ஊடகங்கள் , திருகோணமலை ,மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த அமரா சமாச உறுப்பினர்கள் என பலரும் பற்குபற்றி .இளையோரின் ஆய்வினைப் பாரட்டி ஊக்கப்படுத்திதோடு தமது விமர்சனப்பகிர்வினையும் முன்வைத்திருந்தனர்.அத்துடன் ஒவ்வொரு ஆய்வும் கொண்டுள்ள ஆய்வுப் பருமன் மற்றும் ஆராயப்பட்ட விடயங்களும் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் மேற்கொண்ட ஆய்விற்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் குறித்தும் பாராட்டியதோடு , இத்தகைய செயற்திட்டம் மாவட்டரீதியில் வெற்றியளித்துள்ளமையின் பிரதிபலிப்பாக ஆய்வு வெளியீடு அமைந்துள்ளமை குறித்து விழுதின் நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பாளர் இந்துமதி ஹரிகரதாமோதரன் அவர்களுக்கும், இளையோர் பங்குபற்றுனர்கள் சார்ந்து பாரட்டுத் தெரிவிக்கபப்ட்டமை குறிப்பிடத்தக்தாகும்.

## சிராஜ் எக்ஸலன் கல்லூரியின் பரிசளிப்பு விழா





எஸ்.எம்.எம்.முர்ஷித்

ஓட்டமாவடி சிராஜ் எக்ஸலன் கல்லூரியினால் நடாத்தப்படும் பகுதி நேர வகுப்பு பாடங்களில் திறமை காட்டிய சாதனையாளர்கள கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. ஓட்டமாவடி சிராஜ் எக்ஸலன் கல்லூரியின் அதிபர் ஏ.எல்.ரஹீஸ் (நளிமி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் பனிப்பாளர் எம்.எம்.எம்.நவாஸ் ஆசிரியர், கல்லூரியின் நிருவாக உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ஏ.நஜீம் (சிறாஜி), அஷ்ஷெய்க் எம்.கபீர் (இஸ்லாஹி), கல்லூரியின் விரிவுரையாளர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தரம் 06, 07, 08ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இவ்வருடத்திற்கான இரண்டாம் தவணைப் பரீட்சையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்ற மாணவர்களும், பாடங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு



நூருல் /ஹுதா உமர்

சிறந்த ஊடக நெறிமுறைகளை உருவாக்கி போலியான செய்திகளை இல்லாதொழிப்பது தொடர்பில் ஸ்கை தமிழ் வலையமைப்பு மற்றும் சிறகின் மொழி இணைந்து நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு பலான்கொடை கனகநாயகம் தமிழ் தேசிய கல்லூரியில் பாடசாலையின் அதிபர் கே.ஷண்முகவேல் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பாடசாலை ஊடகப் பிரிவின் பொறுப்பாசிரியர் ஏ. எப் இர்பானாவின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இச் செயலமர்வில் தரம் 06 தொடக்கம் 12 வரையான பாடசாலை ஊடகப் பிரிவை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த இலவச ஊடக செயலமர்வு ஸ்கை தமிழ் பிராந்திய ஒருங்கிணைப்பாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான ஷிஹானா நௌபர் இனால் நடாத்தி வைக்கப்பட்டது.









நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி போட்டியில் காரைதீவு விபுலானந்தா சாதனை



**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி போட்டியில் வரலாற்றில் முதல் தடவையாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளது என்று கல்லூரி அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் தெரிவித்தார். கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி போட்டிகள் கடந்த(25) காரைதீவு விபுலாந்த மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை) மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் ,கிழக்கு மாகாணத்தில் இருந்து ஆக அம்பாறை மாவட்டம் சார்பில் நான்கு அணிகள் மாத்திரமே கலந்து கொண்டன. இறுதிப்போட்டியில் காரைதீவு விபுலானந்தா அணியும் ,அம்பாறை டிஎஸ்.சேனநாயக்க அணியும் மோதின. இப்போட்டிகளில் 4–1 என்ற ரீதியில் முதலிடத்தை அம்பாறை டி.ஸ். சேனநாயக்கா கல்லூர அணியினரும் ,இரண்டாம் இடத்தை காரைதீவு விபுலாந்த மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை) அணியினரும் பெற்றுக்கொண்டனர்.

வரலாற்றில் முதல் தடவையாக கலந்து கொண்டு முதல் போட்டியில் றன்னஸ் அப் சாதனையை நிகழ்த்திய எஸ்.சுஜாந்த் தலைமையிலான விபுலானந்தா அணியை தினமும் பயிற்றுவித்த காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணியினருக்கும், என்னோடு தோளோடு தோள் நின்று அணியை நெறிப்படுத்திய பயிற்றுவிப்பாளர்களான சுலக்ஸன் லோகதாஸ் ஆகியோருக்கும், வழிப்படுத்திய அதிபருக்கும் நன்றி கூறுவதாக கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் ஜெயநாதன் சோபிதாஸ் தெரிவித்தார்.

# கோரளைப்பற்று மத்தியில் சிறுவர் முதியோர் தினம்



"வாழும் போதே மனிதனை வாழ்த்த வேண்டும் வளரும் போதே சிறுவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்" இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் நம் உலகில் நடைபெறும் வரும் ஒரு நல்லவிடயமாக பதிவிடப்பட்டுள்ளது. ஒக்டோபர்–01 சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவும், சிறுவர் பிரிவும், சமூக சேவை பிரிவும் இனைந்து சிறந்ததொரு செயற்பாட்டு நிகழ்வை கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் ளு.உ.முசாமில் அவர்களின் தலைமையில் வாழைச்சேனை அன்நூர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடாத்தி இருந்தது.

இந்நிகழ்வில் சமுர்த்தி பயனுகரியான கதிஜா உம்மா அவர்கள் 100 வயதை கடந்தும் வாழ்கிறார், அவரை வாழும் போதே வாழ்த்துவோம் எனும் தொனிப்பொருளில் வாழ்த்தியது மற்றோருக்கு ஒரு நெகிழ்ச்சியான விடயமாக காணப்பட்டது. இவர் மாவடிச்சேனை 208ஃயு கிராமத்தை சேர்ந்தவர், ஆரம்ப காலம் முதல் சமுர்த்தி திட்டத்தில் இணைந்து செயற்பட்டு வரும் ஒரு போற்றப்படும் தாயாவார்.

மற்றுமொரு நிகழ்வு மேலும் மேலோங்கி இருந்தது சமுர்த்தி திட்டத்தின் ஊடாக வறிய மாணவர்களுக்கு சிப்தொற புலமை பரிசில் வழங்கப்படுவது தாங்கள் அறிந்த விடயமே. இந்த சிப்தொற புலமை பரிசிலினை கடந்த காலங்களில் பெற்று தங்கள் கல்வியை தொடர்ந்த 17 சமுர்த்தி பயனுகரிகளின் பிள்ளைகள் இம்முறை பல்கலை கழகத்திற்கு தெரிவாகி, அதிலும் ஒருவர் மருத்துவ பீடத்திற்கு தெரிவாயுள்ளது, இவ் சிப்தொற புலமை பரிசிலுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தி உள்ளது. வளரும் போதே சிறுவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் இதற்காக அவர்கள் இன்றைய நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்..

மற்றுமொரு நிகழ்வில் வயது முதிர்ந்த 15 முதியவர்களுக்கு கட்டில்கள் மற்றும் அதற்கான சகல வசதிகளும் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க வேண்டும், சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் எனும் கருப்பொருளுடன் வாழைச்சேனை அன்நூர் பாடசாலையில் இருந்து விழா நடைபெற்ற மண்டபம் வரை அதிதிகளுடன் ஊர்வலம் நடைபெற்றது. இச்சிகழ்வுக்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூபரஞ்சனி முகுந்தன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட உதவி செயலாளார் யு.நவேஸ்வரன் அவர்களும் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ளு.புவனேந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் கோரளைப்பற்று மத்தி உதவி பிரதேச செயலாளர், மாவட்ட சமுர்த்தி கணக்காளர் ஆ.ளு.பஸீர் அவர்களும், சமுர்த்தி சிரேஸ்ட முகாமையாளர் அலி அக்பர் அவர்களும், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# கட்டுரை போட்டியும் பரிசளிப்பு விழாவும்



**(வி.ரி சகாதேவராஜா)**

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் 125 ஆவது ஆண்டு தொடர்விழாவின் ஓர் அங்கமாக, ராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்தின் கீழ் அன்று இயங்கிய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இறுதி போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் ,இலங்கை ராமகிருஷ்ண மிஷன் என்ற ஆவணப்பட வெளியிட்டு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை(1) கல்லடி சுவாமி விபுலானந்த மணி மணிமண்டபத்தில் நடைபெற்றது .

கல்லடி ராமகிருஷ்ண மிஷன் உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ வரவேற்பு வழங்க, கிழக்கு மாகாண மீன்பிடித்துறை பணிப்பாளர் எஸ்.சுதாகரன் 'விவேகானந்தர் மகாத்மியம் "என்ற பாமாலை சூட்டினார். சிறப்புரையை கிழக்கு மாகாண கல்வி திணைக்கள ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி. பார்த்திபன் நிகழ்த்த, பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்து சிறப்பித்தார். சுவாமி ஆவணப்பட வெளியீடும் இடம்பெற்றது .

சிறப்பு உரையை மட்டக்களப்பு நன்னடத்தை திணைக்கள பொறுப்பாளர் பா. சந்திரகாந்தன் நிகழ்த்த, நன்றி மற்றும் மகிழ்வுரையை இல்ல முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் நிகழ்த்தினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் ஆவணப்பட வெளியீடும் இடம் பெற்றன.

# பேசாலையில் சிறுவர் முதியோர் தினம் விழா



**(வாஸ் கூஞ்ஞ)**

ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் மாவட்டத்தில் பல இடங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டன. இந்த வகையில் பேசாலை பகுதியிலும் இவ் தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ் தினத்தை முன்னிட்டு மன்.பேசாலை சென் மேரிஸ் வித்தியாலயத்தின் எற்பாட்டில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் காலை கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் ஆலயத்துக்குள் சிறுவர் முதியோரிடம் மலர் கொத்துக்கள் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்தியதுடன் அவர்களிடம் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து சென் மேரிஸ் வித்தியாலய அதிபர் எஸ்.இராஜேஸ்வரன் பச்சேக் (ராஜா மாஸ்ரர்) தலைமையில் மாணவர்கள் பேரணியாக பேசாலை பிராதான வீதியில் ஒன்றுகூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததுடன் அங்கு குழுமியிருந்த பெற்றோர் பெரியோர்களுக்கு தங்கள் எதிர்காலம் சிறக்க வேண்டிய கருத்துக்களையும் சிறுவர்கள் முன்வைத்து தங்கள் குரல் பதிவுகளையும் முன்வைத்தனர். அத்துடன் பாடசாலை அதிபர் ராஜா மாஸ்ரர் . பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் மன்னார் சிறுவர் நன்னடத்தை அலுவலகர் ஜே.ஒஸ்மன் குலாஸ் ஆகியோரும் சிறுவர் தொடர்பான கருத்துக்களையும் முன்வைத்து உரையாற்றினர்.

# மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் முப்பெரும் வேலைத்திட்டம்



**(ரக்ஸனா)**

கிரான் பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலாந்தனை கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள பொத்தானை கிராமம் தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களை பின்பற்றும் மக்கள் வாழும் கிராமமாகும். இதனால் இங்கு மதங்களுக்கு இடையிலான இன முறுகல்கள் அடிக்கடி ஏற்பட்டு வந்தது. மதங்களுக்கு இடையிலும், இனங்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் சனிக்கிழமை(01) விழிப்புணர்வு வீதி நாடகம் ஒழுங்கு செய்து விழிப்புணர்வு செய்யபட்டது.

"நான் ஒரு சுக தேகி மருத்துவ முகாம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் 67 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மருத்துவ வசதிகள் அற்ற கிரான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வாகனேரி, பெட்டைகுளம், குளத்துமடு, முள்ளிவட்டவான் கிராமங்களை சேர்ந்த மக்கள் 7 மாத காலமாக எந்த ஒரு மருத்துவ வசதியும் இல்லாமல் காணப்பட்டனர். இங்கு வாழ்கின்ற 100 மக்களுக்கான தொற்றா நோய்களை கண்டறியும் வைத்திய மருத்துவ முகாம் நடை பெற்றதுடன், தொற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட சுமார் 50 பொதுமக்களுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன. இவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு காணப்பட்டார்கள்.

இம்மருத்துவ முகாமானது மிகவும் பிரயோசனமாக காணப்பட்டது. இதில் சிறு குழந்தைகள் உட்பட வயது வந்தவர்கள் என சுமார் 150 கிராம மக்கள் பயன் பெற்றுள்ளார்கள். பெட்டைக்குளம் கிராமத்தில் சுமார் 30 குடும்பங்களை சேர்ந்த பெண்கள், பிள்ளைகள், முதியோர்கள் மிகவும் சுகாதார சீர்கேடு மற்றும் உணவு இல்லாமல் கஷ்டப்பட்டதுடன், இங்கு இளவயது திருமணம், சிறுவர்கள் போதை பொருள் பாவனை, பாடசாலை இடை விலகல், குடும்ப வன்முறை அதிகரித்து காணப்பட்டன.

இவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அக்கிரம மக்கள் அனைவருக்கும் உணவு சமைத்து வழங்கியதுடன் நல்லிணக்கத்தையும் இவர்கள் மத்தியில் ஏற்படுத்தி விழிப்புணர்வு வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன், சட்ட ஆலோசனைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

# கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "வலய மட்ட பிரதான சிறுவர் தின விழா



**நூருல் /ஹுதா உமர்**

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "வலய மட்ட பிரதான சிறுவர் தின விழா – 2022" நிகழ்வானது கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் சனிக்கிழமை (01) சாய்ந்தமருது கமுஃகமுஃ அல்–ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. "சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம் " எனும் தொனிப்பொருளினை மையமாக கொண்டு இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதம உள்ளக கணக்காய்வாளர் எச்.எம்.எம்.றஷீட் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சட்டத்தரணி எம்.எம்.ஜவாத் கலந்து சிறப்பித்தார். மாணவர்களின் கலை, இலக்கிய நிகழ்வுகளும் துவிச்சக்கர பேரணியும், பரிசளிப்பும் இடம்பெற்ற இவ்விழாவில் கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் கல்முனை வலயப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.